Singapore Examinations and Assessment Board

**Singapore–Cambridge General Certificate of Education Normal (Technical) Level (2024)**

# Basic Tamil
# அடிப்படைத் தமிழ்
# (Syllabus 1204)

© MOE 2024

# பொருளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய பாடத்திட்ட நோக்கங்கள் | 3 |
| மதிப்பீட்டு நோக்கங்கள் | 4 |
| தேர்வு அமைப்புமுறை | 5 |
| தேர்வு விவர அட்டவணை | 8 |
| நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்பு மதிப்பீட்டுத் திட்டம் | 12 |
| வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் | 14 |

# 1 தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய பாடத்திட்ட நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட உயர்நிலை வகுப்புகளுக்குரிய தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தலாகும். இவற்றோடு தமிழ் மரபுக் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு நாட்டுருவாக்கத்துக்குத் தேவையான பண்புநலன்களையும் அவர்களிடத்தில் வளர்த்தலாகும். எனவே, உயர்நிலை வகுப்புகளுக்குரிய தமிழ்மொழிப் பாடத்திட்டம் பின்வரும் கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

### 1.1 கேட்டலும் நோக்கலும்

- மாணவர்கள் பல்வகையான கேட்டல் நோக்கல் வளங்களைக் கேட்டும் பார்த்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்

### 1.2 பேசுதல்

- மாணவர்கள் பல்வேறு சூழல்களுக்கேற்பப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசுவர்

### 1.3 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மாணவர்கள் சூழலுக்குத் தக்கவாறு பொருத்தமான முறையில் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவர்

### 1.4 படித்தலும் நோக்கலும்

- மாணவர்கள் பல்வகையான பனுவல்களைப் பார்த்தும் படித்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்

### 1.5 எழுதுதல்

- மாணவர்கள் சரியான மொழியமைப்புடனும் படைப்பாக்கத் திறனுடனும் தங்கள் கருத்துகளைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவர்

### 1.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மாணவர்கள் சூழலுக்கேற்பப் பொருத்தமான மொழியமைப்பையும் வடிவத்தையும் பயன்படுத்தி எழுத்துவழியே கருத்துப்பரிமாறிக்கொள்வர்

# 2 மதிப்பீட்டு நோக்கங்கள்

உயர்நிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கற்றல், கற்பித்தலின் வாயிலாகப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

### 2.1 கேட்டல்

- எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் வெளிப்படுத்துதல்

### 2.2 பேசுதல்

- தமது எண்ணங்களையும் கருத்துகளையும் பொருத்தமான சொல்வளத்தையும் தொடரமைப்பையும் பயன்படுத்திச் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்

### 2.3 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- கொடுக்கப்படும் தலைப்பையொட்டி ஈடுபாட்டுடன் உரையாடுவதோடு தம் கருத்துகளையும் மனவுணர்களையும் பொருத்தமான சொல்லாட்சியையும் தொடர்களையும் பயன்படுத்திச் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்தரைத்தல்

### 2.4 படித்தல்

- பலவகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து சரியான உச்சரிப்புடன் வாய்விட்டுப் படித்தல்
- பலவகையான பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

### 2.5 எழுதுதலும் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றமும்

- கொடுக்கப்படும் சூழமைவை அடிப்படையாகக்கொண்டும் எழுதுவதற்குரிய நோக்கம், யாருக்கு எழுதப்படுகிறது, சூழல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டும் சரியான மொழியமைப்பைப் பயன்படுத்திக் கருத்துகளைத் தெளிவுற எழுதுதல்

# 3 தேர்வு அமைப்புமுறை

அடிப்படைத் தமிழ்த் தேர்வு மொத்தம் நான்கு வினாத்தாள்களைக் கொண்டது.

<u>வினாத்தாள் 1: நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்பு</u>

**(30 நிமிடங்கள், 10 மதிப்பெண்கள், 10%)**

இப்பகுதியில் கொடுக்கப்படும் சூழமைவை அடிப்படையாகக்கொண்டு 50 சொற்களுக்குக் குறையாமல் கருத்துகளைத் தட்டச்சிடவேண்டும். சூழமைவு சமூக ஊடகப் பதிவாக அமைந்திருக்கும். இப்பகுதியில் தேர்வெழுதுபவர் தம் படைப்பை எழுதுவதற்குத் துணைபுரியும் வகையில் இரண்டு நிழற்படங்களும் இரு தொடர்களும் கொடுக்கப்படும். பொருள், மொழி மற்றும் அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுபவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

<u>வினாத்தாள் 2: மொழி மரபும் பயன்பாடும் மற்றும் கருத்தறிதல்</u>

**(40 நிமிடங்கள், 25 மதிப்பெண்கள், 25%)**

இத்தாள் ‘அ’, ‘ஆ’, ‘இ’ ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது.

**‘அ’ பிரிவு (மொழிப் பயன்பாடு)**

**(5 மதிப்பெண்கள், 5%)**

இப்பிரிவில் இரண்டு குறும்பனுவல்கள் இடம்பெறும்.

இப்பிரிவில் ஒரு பனுவலையொட்டி (சொல்லளவு: 35-40) இரண்டு தெரிவுவிடை வினாக்களும் மற்றொரு பனுவலையொட்டி (சொல்லளவு: 50-55) மூன்று தெரிவுவிடை வினாக்களும் கேட்கப்படும். அவை பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள இலக்கணக்கூறுகளை மதிப்பிடும் வகையில் அமைந்திருக்கும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**‘ஆ’ பிரிவு (மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்)**

**(4 மதிப்பெண்கள், 4%)**

இப்பிரிவில் ‘மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்’ என்னும் தலைப்பின்கீழ் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவை பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள 40 மரபுத்தொடர்களையும் 20 இணைமொழிகளையும் அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்கும். ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று தெரிவுகள் கொடுக்கப்படும். அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**‘இ’ பிரிவு (கருத்து விளக்கப்படக் கருத்தறிதலும் வாசிப்புக் கருத்தறிதலும்)**

**(16 மதிப்பெண்கள், 16%)**

இப்பிரிவில் ஒரு கருத்து விளக்கப்படக் கருத்தறிதலும் இரண்டு வாசிப்புக் கருத்தறிதல் பனுவல்களும் இடம்பெறும்.

**கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

இப்பிரிவில் ஒரு கருத்து விளக்கப்படக் கருத்தறிதலையொட்டி (சொல்லளவு: 110-120) மூன்று தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**வாசிப்புக் கருத்தறிதல்**

<u>பனுவல் 1 (நடப்புச் செய்தி)</u>

இப்பிரிவில் ஒரு பனுவலையொட்டி (சொல்லளவு: 100-110) மூன்று தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

<u>பனுவல் 2 (கதை)</u>

இப்பிரிவில் ஒரு கதையையொட்டி (சொல்லளவு: 90-95) இரண்டு வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

## <u>வினாத்தாள் 3 - வாய்மொழி</u>

**(10-15 நிமிடங்கள், 45 மதிப்பெண்கள், 45%)**

இத்தேர்வு பின்வரும் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது:

- வாய்விட்டு வாசித்தல்
- ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்

**1. வாய்விட்டு வாசித்தல்**
**(15 மதிப்பெண்கள், 15%)**

தேர்வுக்கு அமர்பவர் கணினித்திரையில் இடம்பெறும் ஓர் உரைநடைப் பகுதியை (சொல்லளவு: 80) வாய்விட்டு வாசிக்கவேண்டும். பெரியோர் வாழ்வில் நிகழ்ந்த சம்பவமாகவோ நன்னெறி புகட்டும் கதையாகவோ வாசிப்புப் பனுவல் அமைந்திருக்கும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசைநயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**2. ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**
**(30 மதிப்பெண்கள், 30%)**

தேர்வுக்கு அமர்பவர் 55-60 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும் ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்கவேண்டும். அதனைத் தொடர்ந்து தேர்வுக்கு அமர்பவர் தேர்வாளர்களுடன் ஒளிக்காட்சியையொட்டிய உரையாடலில் ஈடுபடவேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலில் சரளம், மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

## <u>வினாத்தாள் 3: கேட்டல் கருத்தறிதல்</u>

**(ஏறத்தாழ 30 நிமிடங்கள், 20 மதிப்பெண்கள், 20%)**

செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு முதலான வகைகளில் நான்கு குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரே தேர்வில் இவ்வகைகள் அனைத்தும் இடம்பெறவேண்டும் என்ற அவசியமில்லை.

# 4 தேர்வு விவர அட்டவணை

**2024-ஆம் ஆண்டுமுதல் அமல்படுத்தப்படும் சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் கல்விச் சான்றிதழ் வழக்கநிலை (தொழில்நுட்பம்) அடிப்படைத் தமிழ் (1204)**

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1<br>(30 நிமிடங்கள்) | <u>நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்பு</u> | | | **(10%)** |
| | (50 சொற்களுக்குக் குறையாமல்) | சுயவிடை | 1 | 10 |
| 2<br>(40 நிமிடங்கள்) | <u>மொழி மரபும் பயன்பாடும் மற்றும் கருத்தறிதல்</u> | | | **(25%)**<br>**25** |
| | <u>‘அ’ பிரிவு:</u><br><u>மொழிப் பயன்பாடு</u> | | | |
| | A1 மொழிப் பயன்பாடு – பனுவல் 1 | தெரிவுவிடை | 2 | 2 |
| | A2 மொழிப் பயன்பாடு – பனுவல் 2 | தெரிவுவிடை | 3 | 3 |
| | <u>‘ஆ’ பிரிவு</u><br>B3 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் | தெரிவுவிடை | 2 | 4 |
| | <u>‘இ’ பிரிவு</u><br>C4 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் | தெரிவுவிடை | 3 | 6 |
| | D5 வாசிப்புக் கருத்தறிதல் - பனுவல் 1 | தெரிவுவிடை | 3 | 10 |
| | வாசிப்புக் கருத்தறிதல் - பனுவல் 2 | தெரிவுவிடை | 2 | |

| தாள் | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 3<br><br>(10 -15 நிமிடங்கள்) | <u>வாய்மொழி</u><br><br>1. வாய்விட்டு வாசித்தல்<br><br>2. ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் | <br><br>சுயவிடை<br><br>சுயவிடை | <br><br>1<br><br>1 | **(45%)**<br><br>15<br><br>30 |
| **3**<br><br>(ஏறத்தாழ 30 நிமிடங்கள்) | **<u>கேட்டல் கருத்தறிதல்</u>**<br><br>கேட்டல் கருத்தறிதல்<br>• 7 பனுவல்கள் | <br><br>தெரிவுவிடை | <br><br>10 | **(20%)**<br><br>20 |

## மொழிப் பயன்பாடு

## தேர்வில் சோதிக்கப்படவிருக்கும் இலக்கணக்கூறுகள்

| | |
|---|---|
| **சொல் வகைகள்** | • வினாப்பெயர்<br>• சுட்டுப்பெயர், பதிலிடுபெயர்<br>• தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று |
| **தொடர் அமைப்பு** | • எழுவாய், பயனிலை இயைபு (திணை, பால், எண், இடம், காலம்)<br>• வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், உடன், ஓடு, கு, இன், அது, உடைய, இல், இடம், இலிருந்து, இடமிருந்து)<br>• பெயரடைமொழி, வினையடைமொழி<br>• பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம்<br>• இணைப்புச் சொல் (ஆனால், அதனால், அப்போது, எனவே, ஆகவே, ஆகையால், ஆதலால், எனினும், இருப்பினும், இருந்தபோதிலும்)<br>• உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று |

*இந்த இலக்கணக்கூறுகளின் பட்டியல் 2021-ஆம் ஆண்டு அமலாக்கம் செய்யப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டத்தை (பக்கங்கள் 56-59) அடியொற்றி உருவாக்கப்பட்டுள்ளது.

# தேர்வுக்குரிய மரபுத்தொடர்கள் மற்றும் இணைமொழிகள் பட்டியல்

## மரபுத்தொடர்கள்

1. அவசரக்குடுக்கை
2. அள்ளிக் கொடுத்தல்
3. அள்ளியிறைத்தல்
4. ஆறப்போடுதல்
5. இடங்கொடுத்தல்
6. இடித்துரைத்தல்
7. இரண்டுபடுதல்
8. இனிக்கப் பேசுதல்
9. உச்சிகுளிர்தல்
10. எடுத்தெறிதல்
11. ஒற்றைக்காலில் நிற்றல்
12. ஓட்டம் பிடித்தல்
13. ஓட்டைக்கை
14. ஓட்டைவாய்
15. கண்மூடித்தனம்
16. கதைகட்டுதல்
17. கம்பிநீட்டுதல்
18. கரைத்துக் குடித்தல்
19. காட்டிக் கொடுத்தல்
20. காதுகுத்துதல்
21. கைகொடுத்தல்
22. கையைக் கடித்தல்
23. கைவிரித்தல்
24. சிட்டாய்ப் பறத்தல்
25. செவிசாய்த்தல்
26. சொல்லிக் காட்டுதல்
27. தட்டிக் கழித்தல்
28. தட்டிக் கேட்டல்
29. தட்டிக் கொடுத்தல்
30. தட்டிப் பறித்தல்
31. தலையாட்டுதல்
32. தலையிடுதல்
33. நோட்டம் பார்த்தல்
34. பம்பரமாகச் சுழலுதல்
35. பின்வாங்குதல்
36. மனக்கோட்டை
37. மனந்திறத்தல்
38. மெய்ம்மறத்தல்
39. வாயைக் கட்டுதல்
40. வாலாட்டுதல்

## இணைமொழிகள்

1. அடக்கவொடுக்கம்
2. அறக்கப் பறக்க
3. ஆற அமர
4. இளைத்து களைத்து
5. ஈவிரக்கம்
6. ஊரும் பேரும்
7. ஏட்டிக்குப் போட்டி
8. ஏழை எளியவர்
9. ஒட்டி உலர்ந்து
10. ஓட்டை உடைசல்
11. ஓய்வு ஒழிச்சல்
12. குறுக்கும் நெடுக்கும்
13. கூச்சல் குழப்பம்
14. சட்டதிட்டம்
15. தானதர்மம்
16. பழக்கவழக்கம்
17. பேரும் புகழும்
18. மேடு பள்ளம்
19. மேளதாளம்
20. வாடி வதங்கி

# சிங்கப்பூர் - கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் வழக்கநிலை (தொழில்நுட்பம்)
# அடிப்படைத் தமிழ்

## நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்புக்குரிய மதிப்பீட்டுத் திட்டம்
## (10 மதிப்பெண்கள்)

பொருள் (5 மதிபெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| மதிப்பெண்கள் | 5 | 3-4 | 1-2 |
| **கருத்துப் பொருத்தம்** | ▪ முழுதும் பொருத்தமான கருத்துகள் | ▪ பொருத்தமான கருத்துகள் | ▪ மிகச் சில பொருத்தமான கருத்துகள் |
| **கருத்து வளர்ச்சி** | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ கருத்து வளர்ச்சி ஓரளவு முழுமை பெற்றிருத்தல் | ▪ கருத்துகள் தெளிவற்று இருத்தல்; கூறியது கூறல் இடம்பெற்றிருத்தல் |

மொழியும் அமைப்புமுறையும் (5 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| மதிப்பெண்கள் | 5 | 3-4 | 1-2 |
| **இலக்கணமும் மொழியமைப்பும்** | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி முதலானவற்றில் ஓரிரு பிழைகள் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி முதலானவற்றில் சில பிழைகள் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி முதலானவற்றில் நிறையப் பிழைகள் |
| **கருத்து வெளிப்பாடு** | ▪ கருத்துகளை விளக்கப் பொருத்தமான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ கருத்துகளை விளக்க ஓரளவு பொருத்தமான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ மொழிப் பிழைகளினால் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு இருத்தல் |
| **கருத்துத் தொடர்ச்சி** | ▪ சிறந்த கருத்துத் தொடர்ச்சியுடன் எழுதியிருத்தல் | ▪ ஓரளவு கருத்துத் தொடர்ச்சியுடன் எழுதியிருத்தல் | ▪ கருத்துத் தொடர்ச்சியுடன் எழுத இடர்ப்பட்டிருத்தல் |

# சிங்கப்பூர் - கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் வழக்கநிலை (தொழில்நுட்பம்)
# அடிப்படைத் தமிழ்
# வாய்மொழித் தேர்வுக்குரிய மதிப்பீட்டுத் திட்டம் (45 மதிப்பெண்கள்)

வாய்விட்டு வாசித்தல் (15 மதிப்பெண்கள்)

| வகை<br>மதிப்பெண் | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| | **7-8** | **5-6** | **3-4** | **1-2** |
| **உச்சரிப்பும் சொல்லழுத்தமும்**<br><br>**(8 மதிப்பெண்கள்)** | ▪ தெளிவான உச்சரிப்பு<br><br>▪ தெளிவான சொல்லழுத்தம் | ▪ சில பிழைகளை மட்டும் கொண்ட உச்சரிப்பு<br><br>▪ பெரும்பாலும் தெளிவான சொல்லழுத்தம் | ▪ எளிதில் அறியக்கூடிய பல பிழைகளைக் கொண்ட உச்சரிப்பு<br><br>▪ ஓரளவு தெளிவான சொல்லழுத்தம் | ▪ தெளிவில்லாத உச்சரிப்பு<br><br>▪ தெளிவில்லாத சொல்லழுத்தம் |
| வகை<br>மதிப்பெண் | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
| | **6-7** | **4-5** | **2-3** | **1** |
| **சரளமும் ஓசைநயமும்**<br><br>**(7 மதிப்பெண்கள்)** | ▪ சீரான சரளம்<br><br>▪ பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ பெரும்பாலும் சீரான சரளம்<br><br>▪ பெரும்பாலும் பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ ஓரளவு சரளம்<br><br>▪ ஓரளவு பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ சரளமற்ற வாசிப்பு<br><br>▪ கிட்டத்தட்ட தனித்தனிச் சொல்லாக வாசித்தல் |

**ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் (30 மதிப்பெண்கள்)**

| வகை<br>மதிப்பெண் | வகை 1<br>**13 - 15** | வகை 2<br>**9 - 12** | வகை 3<br>**5 - 8** | வகை 4<br>**1 - 4** |
|---|---|---|---|---|
| **கருத்துரைத்தலும் கருத்து வளர்ச்சியும்**<br><br>**(15 மதிப்பெண்கள்)** | ▪ தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகளை விரிவாக எடுத்துரைத்தல்<br><br>▪ கருத்து வளர்ச்சி தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br><br>▪ உரையாடலில் தொடர்ச்சியாகப் பங்குபெறுதல் | ▪ தலைப்புக்கு ஏற்ற சில பொருத்தமான கருத்துகளை விளக்கிக் கூறுதல்<br><br>▪ கருத்து வளர்ச்சி பெரும்பாலும் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br><br>▪ பெரும்பாலும் உரையாடலில் தொடர்ச்சியாகப் பங்குபெறுதல் | ▪ ஓரளவு தலைப்புக்கு ஏற்ற சில எளிய கருத்துகளைக் கூறுதல்<br><br>▪ கருத்து வளர்ச்சி ஓரளவு தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br><br>▪ சில வேளைகளில் மட்டும் உரையாடலில் தொடர்ச்சியாகப் பங்குபெறுதல்; அடிக்கடி தூண்டுதல் தேவைப்படுதல் | ▪ தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைக் கூற மிகவும் சிரமப்படுதல்<br><br>▪ கருத்து வளர்ச்சி மிகவும் குறைவாக இருத்தல்<br><br>▪ உரையாடலில் தொடர்ச்சியாகப் பங்குபெற இயலாதிருத்தல்; தொடர்ச்சியாகத் தூண்டுதல் தேவைப்படுதல் |
| **சரளமும் மொழிப் பயன்பாடும்**<br><br>**(15 மதிப்பெண்கள்)** | ▪ சரளமாக உரையாடுதல்<br><br>▪ பொருத்தமான சொல்லாட்சியையும் தொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ ஓரளவு சரளமாக உரையாடுதல்<br><br>▪ ஓரளவு பொருத்தமான சொல்லாட்சியையும் தொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ தயக்கத்துடன் உரையாடுதல்<br><br>▪ சிறிது பொருத்தமற்ற சொல்லாட்சியையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ அதிகத் தயக்கத்துடன் உரையாடுதல்<br><br>▪ பெரும்பாலும் பொருத்தமற்ற சொல்லாட்சியையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் |